முருகப்பெருமான் துணை

**மகான் குறும்பைச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.01.2024**, செவ்வாய்கிழமை

1. அன்னதான மகா பிரபுவே
அண்ணலே ஞான வள்ளலே
அன்னதான சேவை கொண்டே
அகிலத்தில் அற்புதம் நடத்த வந்த
2. வந்தநல் ஆறுமுக அரங்கனே
வளருகின்ற உன் தருமம் மெச்சி
சிந்தைபட துல்லிய ஆசியை
சோபகிருது கலை திங்கள் தன்னில்
3. தன்னிலே நவதிகதி குஜன் வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 09 ம் நாள், 23.01.2024, செவ்வாய்கிழமை)
தக்கபடி குறும்பைச் சித்தரும் உரைப்பேன்
மன்னவனாக மாதருமம் வளர்க்கும்
மகான் அரங்கன் தருமசாலைகள்
4. தரும சாலைகள் அனைத்துமே
தணிகாசலன் ஆளுமை தரும்
பெருமைமிக்க தவசாலையும் கூட
பேதமற அன்னதான நெறியை
5. நெறியை ஏற்று மக்கள்
நெருக்கம் கொண்டு வாழவே
அறிவுத் தெளிவு தரும்படி
அனுதினமும் ஞானிகள் பேரில்
6. பேரிலே நாமசெபம் போற்றி
புண்ணிய பாதை விட்டகலா
அறிவுத் தெளிவு தா என வேண்டி
ஆறுமுக அவதார அரங்கனிடம்

7. அரங்கனிடம் தீட்சை ஏற்க
ஆற்றல்மிக்க கிளைகள் தனில்
வரங்களாக மாறிவருகின்ற
வல்லமையான அன்னமிட உதவி

8. உதவியே தருமபலம் பெருக்க
உயிர் கொலை நீக்கி வாழும்
ஆதரவை கூட்டி உலகில்
ஆற்றல் தனை பெருக்க

9. பெருக்கவே ஜீவ ஆற்றலதும்
பிரணவ சூட்சும சக்தி அடைந்து
கருத்தாக சரவண ஜோதியை
கண்ணுற்று அகத்தே காணும்

10. காணும் தவபலமாக மாறி
கண்டுரைப்பேன் அரங்கன் வழி
ஞானம் தேடும் அவரவர்க்கும்
நம்பிக்கையுற ஞான சித்தி கண்டு

11. கண்டுமே உலகோர் அரங்கனாக
காண்பர் தன்னுள் சூட்சுமம்
உண்டாக்கி கந்தனை காண்பர்
உலகினில் இனி பிறவா வண்ணம்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—